**மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி**

**அசல் வழக்கு எண். 66 /2022 வா.சா.1**

2026–ம் ஆண்டு ஜீலை திங்கள் 14–ம் நாள் செவ்வாய்கிழமை–ன் வாக்குமூலம் 1857ம் ஆண்டு சட்டப்பிரிவு17(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

பெயர்: வெண்ணிலா தந்தை பெயர்: சொர்ணம்

---

**14.07.2026.பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் படிக்கவில்லை. நான் தாவாச் சொத்தில் வீடு கட்டியுள்ளேன். அந்த வீட்டோட இடத்தை விட்டுவிட்டு போகுமாறு பிரதிவாதி சொன்னதின் அடிப்படையில் இவ்வழக்கு தாக்கல் செய்தேன். தாவாச் சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. பார்த்தால் தான் தெரியும். தாவாச் சொத்தின் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த நிரூபணவாக்குமூலத்திற்கு விவரங்கள் நான் சொன்னேன். வழக்கறிஞர் தயார் செய்தார்.

2. தாவாச் சொத்தானது எனது அம்மாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 2011ம் வருடம் மேற்படி தாவா சொத்தை பிரதிவாதி விற்பனை செய்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2017ம் வருடம் எனது அம்மா பதிவில்லாத தானசெட்டில்மெண்ட் எனக்கு ஏற்படுத்தி கொடுத்தார் என்று ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் போலியாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

3. தாவாச் சொத்திற்கு 2021ம் வருடம் எனது பெயரில் உள்ள வீட்டுவரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி பெயரில் தற்போது வீட்டுவரி ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவாச் சொத்தில் உள்ள மின் இணைப்பு எண் எனக்கு தெரியாது. எனது பெயரில் மின் இணைப்பு தவறாக வழங்கப்பட்டது என்று எனது அக்கா மின்வாரியத்திற்கு இரத்து செய்ய கோரி மனு கொடுத்தார் என்றால் சரிதான். மின்சார வாரியம் எனக்கு மேற்படி மனுவில் அறிவிப்பு வழங்கியது என்றாலும்,பிரதிவாதி மின்வாரியத்தில் தாக்கல்செய்த மனுவை தள்ளுபடி செய்ய நான் உயர்நீதிமன்றத்தில் மனு செய்திருந்தேன் என்றால் சரிதான்.

4. உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் மனு எண் தெரியாது. உயர்நீதிமன்ற வழக்கு எண் WP(MD) No. 21542/2023 வழக்கானது சிவீல் நீதிமன்றத்தை அணுகுமாறு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். வில்லங்கசான்றை பார்வையிட்டால் பிரதிவாதி கிரையம் கொடுத்த பின்னர் பல வில்லங்கள் ஏற்பட்டது தெரிய வரும் என்றால் தெரியாது.

5. 2018 ம் வருடம் ஆவண எண் . 1497/2018 படி UCO Bank ல் கடன் பெற்றுள்ளதாக எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கடந்த 07.09.2022 ல் பிரதிவாதிக்கும், UCO வங்கி மேலாளருக்கும் நான் அறிவிப்பு அனுப்பிள்ளேன் என்றால் இல்லை. நான் எனது நிரூபணவாக்குமூலத்தில் அறிவிப்பு அனுப்பியதாக சொல்லிவிட்டு தற்போது எனது வழக்கிற்கு முரண்படாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. குடியிருக்கும் விலாசத்திற்கு தான் பொதுவாக ஆதார் அட்டை, அடையாளம் அட்டை வழங்கப்படும் என்றால் சரிதான். எனது ஆதார் முகவரியில் சென்னை என்று உள்ளது என்றால் சரிதான். எனது வாக்காளர் அட்டையில் எனது முகவரி சென்னை என்று உள்ளது என்றால் சரிதான். எனது கணவர், எனது பிள்ளைகளுடன் சென்னையில் வசிக்கிறேன்.

7. கடந்த 10.10.2022 ம் தேதியன்று நடந்த சம்பவம் குறித்து எனக்கு ஞாபகமில்லை. மேற்படி 10.10.2022 ம் தேதி பிரதிவாதி அடிஆட்களுடன் வந்து வீட்டை விட்டு வெளியேறுமாறு மிரட்டியதாக எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். உண்மையிலேயே அவ்வாறு சம்பவம் நடந்திருந்தால் நான் மேற்படி சம்பவம் குறித்து சாட்சியம் அளித்திருப்பேன் என்றாலும், சம்பவம் நடக்காததால் தான் அதைபற்றி ஞாபகமில்லை என்று வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. 2011 ம் வருடம் கிரையம் ஏற்பட்டாலும் பட்டா எனது அம்மா பெயரில் இருந்து மாற்றபடாததால் பட்டாவை பயன்படுத்தி வீடு கட்டுவதற்கு அப்ரூவல் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். பின்னர் பஞ்சாயத்தில் விசாரணை செய்து மேற்படி அப்ரூவல் மற்றும்

பட்டாவை இரத்து செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். 2011ம் வருடம் ஏற்பட்டகிரையம் மற்றும் அதன்படி பட்டா மாற்றம் செய்யப்பட்டு தாவாச் சொத்தானது பிரதிவாதி வசம் உள்ளது என்றால் சரியல்ல. நான் தான் தாவாச் சொத்தை அனுபவித்து வருகிறேன்.

9. பிரதிவாதி தாவாச்சொத்தில் பொருத்தியிருந்த கேமராக்களை உடைத்து விட்டதாக பிரதிவாதி என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. நான் தான் கேமரா பொருத்திருந்தேன். தாவாச் சொத்தில் நான் குடியிருக்கவில்லை என்றாலும், சென்னையில் வசித்து வருகிறேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக தாவாச் சொத்தில் வசிப்பதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிரூபணவாக்குமூலத்திற்கு எதிராக நான் சாட்சியம் அளிப்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எனக்கு தாவா வழக்கு தாக்கல் செய்வதற்குஉரிமை மூலம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.